<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம். இலால்குடி.</u>

<u>EP.11/22 in OS.236/18</u>

<u>நாள். 21.12.2023</u>

டிசம்பர் –21 ஆம் தேதி வாதி சாட்சியாக நபரின் வாக்குமூலம் (1989–ம் ஆண்டு 55 வது விதியின் 9 வது ஏற்பாட்டின்படி) திரு. T. சோமு உதவியாளர் என்பவரது ஆணையீட்டால் உறுதி கூறப்படுகின்றது. பிரமாணம் செய்யப்படுகிறது.

==================================================================

| | |
|---|---|
| பெயர் = மோகன் | தகப்பனார் பெயர்= |
| கிராமம் = | தாலுக்கா = |
| சாதி = | சமயம் = |
| தொழில் = | வயது = |

==================================================================

**<u>PW2 மு.வி</u>**

நான் அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். அழைப்பாணையில் கண்டுள்ள ஆவணங்கள் அனைத்தும் கொண்டுவந்துள்ளேன். புல எண்.304/20–ன் புலப்பட அசல் ஆவணங்களை கொண்டு வந்துள்ளேன். மேற்படி புல எண்ணிற்கான புலப்படம் 1986 ல் தயாரிக்கப்பட்டது. அதில் புல எண்.304/20 ல் எந்த உட்பிரிவும் செய்யப்படவில்லை. மேற்படி புல எண்ணிற்கான அடங்கல் பதிவேடு கொண்டுவந்துள்ளேன். 1986 ல் மேற்படி புல எண்ணிற்கான அடங்கல் பதிவேட்டில் பிச்சைஉடையார், பிச்சை ஆகியோர் பெயர் உள்ளது. மேற்படி புல எண்ணிற்கான நத்தம் அ பதிவேடு 1992 ல் ஏற்பட்டது. அதில் 1992 அ பதிவேட்டில் யார் பெயர் உள்ளது என்றால் பழைய பட்டாவை பார்த்தால் தான் சொல்ல இயலும். அதன் பின்னிட்டு புல எண்.304/20 ஆனது எப்போது உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் 17.07.2020 அன்று நத்தம் புல எண்.304/20A, 181 ச.மீ ஆக உட்பிரிவு செய்யப்பட்டது. அதில் நல்லப்புடையார் மகன் தணக்கப்புடையார், சேகர் மனைவி சாந்தி, சேகர் மக்கள் வெண்ணிலா, ராதிகா, பாரதிராஜா ஆகியோர்

பெயர்கள் உள்ளது. புல எண்.304/20B யில் மருதை உடையார் மகன் பிச்சை, சேகர் மனைவி சாந்தி, சேகர் மக்கள் வெண்ணிலா, ராதிகா, மகன் பாரதிராஜா ஆகியோர் பெயர்கள் உள்ளன. மேற்படி 304/20B ஆனது 79 ச.மீ ஆக கண்டுள்ளது. புல எண்.304/20C யில் மருதை உடையார் மகன் பிச்சை பெயரில் 90 ச.மீ உள்ளது. மேற்படி உட்பிரிவுகளானது TK No.3191/2020 Dt.17.07.2020 மற்றும் TKNo.3320/2022 Dt.26.04.2022 தேதிய நடவடிக்கைகளின்படி உட்பிரிவு செய்யப்பட்டது. மேற்படி உட்பிரிவுகள் 2018 ல் ஏற்படவில்லை. அதற்கு முன்பு 8A126/1417 dt.02.04.2008 நடவடிக்கையின்படி பொதுவாக உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி 2008 நடவடிக்கையில் புல எண்.304/20 ஆனது நத்தத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. மேற்படி 2008, 2020 மற்றும் 2022 நடவடிக்கைகளானது யாருடைய மனுவின் பெயரில் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் ஆவணங்களை பார்த்தால் தான் சொல்ல இயலும்.

மேற்படி ஆவணங்களை தாக்கல் செய்வதற்காக 05.01.2024 அன்று ஒத்திவைக்கப்படுகிறது.